

# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி

# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

**முகக் கவசம், உயிர்கவசம்**

**இன்று பிலவ ஆண்டு, மாசி மாதம் 23ஆம் நாள்**

**2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆம் நாள் திங்கட்கிழமை**

**அதிகாரம் : மக்கட்பேறு - குறள் எண் : 62**

**குறள்**

எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

**குறள் விளக்கம்**

பெற்றெடுக்கும் மக்கள் பழிபடராத பண்புடையவர்களாக இருப்பின், ஏழேழு தலைமுறை எனும் அளவுக்குக் காலமெல்லாம் எந்தத் தீமையும் தீண்டாது.

பழமொழி ( Proverb )

***A tree is known by its fruits.***

நல்லார், பொல்லாரை நடத்தையால் அறியலாம்

பொன்மொழி

எதிரிகளை தாக்க கட்டப்படும் கோட்டைகளே கல்விச்சாலைகள்.

இரண்டொழுக்க உறுதி மொழி

1. மனித நேயமே உலகில் மகத்தானது. அனைவரிடத்திலும் அன்பு காட்டுவேன்.
2. கல்வி கற்பதே என் தலையாய கடமை. கடமையை என் கண்ணாய் கருதுவேன்

இன்றைய பொது அறிவு வினா விடை

1. பகவத்கீதையில் உள்ள அதிகாரங்கள் 18
2. ஆசியாவின் மிக நீண்ட மலைத்தொடர்கள் - இமய மலைத்தொடர்கள்

## தினமும் ஆங்கிலம் கற்றுக் கொள்வோம்

Have you found the place? . நீங்கள் அந்த இடத்தை கண்டுபிடித்தீர்களா ?

Are you all ready? நீங்கள் அனைவரும் தயாரா ?



# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி

# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

வரலாற்றில் இன்று :

- அல்பேனியா ஆசிரியர் தினம்
- ரோமன் குடியரசு அமைக்கப்பட்டது(1798)
- அலெக்சாண்டர் கிரகாம்பெல் தொலைப்பேசிக்கான காப்புரிமம் பெற்றார்(1876)
- பாலஸ்தீனத்தில் மக்களால் தேர்வு செய்யப்பட்ட முதல் நாடாளுமன்றம் அமைக்கப்பட்டது(1996)

### இன்றைய தினம்

தேசிய தானிய தினம்

### இன்றைய செய்திகள்

- நேற்றைய நிலவரபடி 2770 பேர் கொரானா சிசிக்சையில் உள்ளதாக சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.
- மஹாராஷ்டிரா மாநிலத்தில் புனே மாநகராட்சி வளாகத்தில் சத்ரபதி சிவாஜி சிலையை பிரதமர் மோடி திறந்து வைத்தார். மேலும் புனேயில் மெட்ரோ ரயிலைத் துவக்கி வைத்தார்.
- மின்சாரத்தால் இயங்கும் பேருந்துகளை புனேயில் துவக்கி வைத்தார். மேலும் ஆறுகளை முறையாக பயன்படுத்திட மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார் பிரதமர்.
- மொகாலியில் நடைபெற்ற இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இந்தியா அபார வெற்றி. கபில் தேவின் சாதனையை முறியடித்தார் இந்திய வீரர் அஸ்வின். இரவிந்திர ஜடேஜா ஆட்டநாயகனாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- உக்ரைன்—ரஷ்யா போர் 11 வது நாளாக நீடிப்பு. உக்ரைனில் மருத்துவம் படித்து வரும் இந்திய மாணவர்கள் படிப்பை தொடர இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.